கவன ஈர்ப்புகள்
(திரு. ஆர். எம். வீரப்பன்)

சிமென்ட் எல்லாம் போட்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் அந்த முட்டுக்கொடுத்த கால் முறிந்து விழுந்து, இதனால் இடிந்து விழுந்திருக்கிறதே தவிர, கட்டி முடிக்கப்பட்ட கட்டிடம், உபயோகிப்பதற்கான சான்றிதழ் கொடுக்கப்பட்டதற்குப் பிறகு இங்கே கட்டிடம் இடிந்து விழவில்லை. எல்லாக் கட்டிடமும் சிலநேரங்களில் இப்படிப்பட்ட கட்டிடங்களைக் கட்டுகின்ற நேரத்தில் நடக்கும் தவறைப்போல இங்கேயும் நடந்திருக்கிறது. திரையரங்குக்காகக் கட்டப்படும் கட்டிடம் என்பதுதான் இதில் இருந்த விசேஷம். ஆகவே, கட்டிடம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது அங்கே பணியாளர்கள் அல்லது அதற்குப் பொறுப்பேற்றுக்கொண்டு இருக்கின்ற பொறியாளர்கள் இதைக் கவனிக்காமல் இந்தக் கட்டிடம் கட்டுகின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதுதான் இதிலிருந்து தெரிகிறது. அதற்காக, கட்டிடத்திற்குச் சொந்தக்காரராக இருக்கின்றவர் கைது செய்யப்பட்டு, ஜாமீனிலே விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். அதற்குக் காரணமாக இருந்தவர்கள் மீது வழக்குகள் தொடரப்பட இருக்கின்றன. சிலர் மீது தொடர்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, திரையரங்கு என்கிற அந்த வகையிலே பார்க்க முடியாது. கட்டி முடித்ததற்குப் பிறகுதான் அந்தச் சட்ட விதிகளின்படி கட்டி முடிக்கப்பட்டதா, அது பாதுகாப்பான கட்டிடமா என்றெல்லாம் பார்க்கப்படுகிறது. இது கட்டிக் கொண்டிருக்கின்ற கட்டிடங்களிலே ஒன்று, அவ்வளவுதான். இந்த அஜாக்கிரதையால் இந்தத் தவறு நிகழ்ந்திருக்கிறது. அதற்குக் காரணமாக இருந்தவர்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(15) வேலூர் மின் திட்டம் கந்திலி பகுதியில் துணை மின் நிலையம் ஒன்றை அமைத்தல் குறித்து.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, ''வேலூர் மின் திட்டம், கந்திலி பகுதியில் புதிய துணை மின் நிலையம் துவக்க அனுமதி வழங்கியும் இதுவரை பணிகள் துவக்கப்படாததால் இருந்து வரும் மின் அழுத்தக் குறைவின் காரணமாக அப்பகுதிவாழ் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம் வேலூர் மின்திட்டம், கந்திலி பகுதியில் உள்ள நரியனேரி என்னும் இடத்தில் 31/11 கிலோ வாட் துணை மின் நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட்டு அதற்குத் தேவையான நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. நிலம் கையகப்படுத்தியவுடன் துணை மின் நிலையத்துக்கான பணிகள் துவக்கப்படும்.

கவன ஈர்ப்புகள்

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மின் நிலையம் தொடங்க இருப்பதாக அறிவித்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாகியும், நிலச் சொந்தக்காரர்கள் ஒப்புதல் அளித்தும், துவங்கப்படாமல் இருக்கிறது. ஆனால், இதற்குப் பிறகு தொடங்கப்பட்ட பல திட்டங்கள் முடியும் தருவாயில் இருக்கின்றன. அப்படிப்பட்ட தாமதத்தின் காரணமாகவும் அந்தப் பகுதியில், அதிக அளவு விவசாய மோட்டார்கள் பயன்படுத்துவதாலும், வோல்டேஜ் பிராபிளம் ஏற்பட்டு, அடிக்கடி மோட்டார்கள் எரிந்து, பழுதடைந்து விடுகின்றன. அவற்றைப் போக்க மாற்று ஏற்பாடுகள் செய்யப்படுமா ? உடனடியாக, மின் நிலையப் பணியைத் துவங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்தியிருப்பது உண்மையாக இருக்குமானால், விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாற்று ஏற்பாடுகளின் மூலம் நிவாரணம் எளிதல்ல.

(16) உசிலம்பட்டி தாலுகா, தொட்டப்பநாயக்கனூர் கிராமத்தில் கூடுதல் மின்மாற்றி நிறுவுதல்

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுகா, தொட்டப்பநாயக்கனூர் கிராமத்தில் அப்பகுதி மின்சார இணைப்பு நிலை கருதி புதிதாக நிறுவ திட்டமிட்ட டிரான்ஸ்பார்மர் நிறுவும் பணி கடந்த மூன்றாண்டு காலமாக நடைபெறாமலுள்ளதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலுக்கா தொட்டப்ப நாயக்கனூர் மின் விநியோகப் பகுதிகளில் ஐந்து மின் மாற்றிகள் விநியோகம் செய்கின்றன. மேலும் இந்தப் பகுதியில் மின்சார விநியோக நிலையில் சீர்திருத்தம் செய்ய ஒரு புதிய கூடுதல் மின் மாற்றி விரைவில் நிறுவப்பட உள்ளது. இந்த வேலை கடந்த மூன்றாண்டு காலமாக நடைபெறாமல் உள்ளது என்ற கூற்று தவறு.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 ஆண்டுகாலமாக நடைபெறாமல் உள்ளது என்ற கூற்று தவறு என்று சொல்லியிருக்கிறார்கள். வேண்டுமென்றால், அரசுக்கு அது தெரியப்படுத்தப்படாமல்